***DEPOSITION OF WITNESS***
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**THANJAVUR AT KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 164/2019** | **நாள் – 11.11.2025** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.கணேசன் | தந்தை பெயர் | திரு.சுப்ரமணியன் |

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் விபத்து சமயத்தில் சரக்குகள் ஏற்றி செல்லும் வாகனத்தில் பயணித்தேன் என்றால் சரிதான். அந்த வாகனத்தில் எத்தனை பேர் பயணம் செய்தோம் என்றால் மொத்தம் நான்கு பேர் பயணம் செய்தோம், அதில் ஒருவர் ஓட்டுனர் ஆவார். சரக்குகள் ஏற்றிச் செல்லும் வாகனத்தில் பிரயாணம் செய்ய எனக்கு சட்டப்படி அனுமதி இல்லை என்றால் தெரியவில்லை. மேற்கண்ட வாகனத்தை ஓட்டிச் சென்ற ஓட்டுனருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் உள்ளதா இல்லையா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.5 மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் படி நான் சென்ற வாகனத்தின் ஓட்டுனருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் தற்போது குணமாகிவிட்டது என்றால் சரிதான், ஆனால் பழையமாதிரி வேலை செய்ய முடியவில்லை. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 1 ன் படி எனக்கு சாதாரணகாயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 விடுவிப்பு சான்றின் படி

எனக்கு எவ்வித எலும்பு முறிவும் ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. நான் சரக்குகள் ஏற்றிச் செல்லும் வாகனத்தில் சட்டத்திற்கு விரோதமாக பிரயாணம் செய்ததாலும், 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுனருக்கு முறையான ஓட்டுனர் உரிமம் இல்லை என்பதாலும், 2ஆம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீட்டு தொகையும் எனக்கு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*

***DEPOSITION OF WITNESS***
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**THANJAVUR AT KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 164/2019** | **நாள் – 24.10.2025** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.கணேசன் | தந்தை பெயர் | திரு.சுப்ரமணியன் |
| ஊர் | புளியம்பேட்டை | தாலுக்கா | திருவிடைமருதூர் |
| தொழில் | மேஸ்திரி கொத்தனார் | வயது | 38 |

**முதல் விசாரணை:**

நான் அசல் மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல் நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 27.08.2018 தேதியிட்ட விபத்துப் பதிவேடு உண்மை நகல். |
| ம.சா.ஆ.2 | 30.08.2018 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல். |
| ம.சா.ஆ.3 | 03.09.2018 தேதியிட்ட டிஸ்சார்ஜ் சம்மரி அசல். |
| ம.சா.ஆ.4 | 14.08.2018 தேதியிட்ட விபத்தை ஏற்படுத்திய வாகனத்திற்கான காப்பீடு நகல்.(ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) |

| | |
|---|---|
| ம.சா.ஆ.5 | 03.09.2018 தேதியிட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை உண்மை நகல். |
| ம.சா.ஆ.6 | மனுதாரரின் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் நகல். |

மனுபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :-**

எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2025.11.11 17:50:49 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*